1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதிலே உரிமை மீறல் உள்ளதா இல்லையா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் அதை அனுமதிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

(ஈ) நடவடிக்கை சுருக்க வெளியீடு.

திரு. ரா. உமாநாத் : நேற்று சம்மரி ஆப் ப்ரொசீடிங்சைப் பார்த்ததில் நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாறான பொருள் படக்கூடிய ஒரு வாசகம் அதிலே இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷனை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கொடுத்தது தெரியும். பத்திரிகையிலிருந்து எக்ஸ்பிளனேஷன் கிடைத்த பிறகு அது எடுத்துக் கொள்ளப்படும் என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால் சம்மரி ஆப் ப்ரொசீடிங்சில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்குப் பதிலாக தீர்ப்பு கூறப்படும் என்று இருக்கிறது அதைத் திருத்த வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுவதே இன்ப்ரக்சுவஸ் ஆகும். பதில் எப்போது பத்திரிகையிடமிருந்து வரும் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளப்படும் என்றால் விவாதிக்கப்படும் என்றுதான் பொருள். அது பற்றிப் பேராசிரியர் பெரிய விளக்கமெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

(உ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது பற்றிய நடைமுறை.

டாக்டர் மு. கருணாநிதி: திரு உமாநாத் எழுப்பிய பிரச்சினை தொடர்பாக நானும் தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை அளிக்கப்படுகிற நேரத்தில் தாங்கள் அனுமதிப்பீர்களானால் என்ன உரிமைப் பிரச்சினை என்பதைப் படிக்கச் சொல்லி, பேசச் சொல்லி அதற்குப் பிறகுதான் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் தாங்கள் விளக்கம் கேட்டு தீர்ப்பு வழங்க வேண்டும். அதுதான் இந்த அவையின் மரபாக ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. தீர்ப்பு பிறகு வழங்கப்படும் என்று சபாநாயகர் சொல்லிவிட்டு இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் கழித்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து, கடிதம் எழுதி அவர்களிடம் சமாதானம் பெற்ற பிறகு, இதோடு விட்டு விடலாம் அல்லது உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம் என்று சபாநாயகர் தீர்ப்புக் கூற வேண்டும். சபாநாயகர் அவர்கள் அதற்கு முற்றிலும் மாறாக உரிமைப் பிரச்சினை எழுப்பியவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி



TRUTH ALONE TRIUMPHS